# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்

## மூன்றாம் தவணைப் பரீட்சை – 2017

### பரத நாட்டியம் (45) - I

சுட்டெண் :......................................... தரம் : 11 நேரம் :- 3 மணித்தியாலங்கள்

**கவனிக்குக :**

1. எல்லா வினாக்களுக்கு விடை எழுதுக.
2. **1 தொடக்கம் 40** வரையான வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1),(2),(3),(4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.
3. உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாக்கும் உரிய வட்டங்களின் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (X) இடுக.

The National e-Learning Portal for The General Education

1. தியானஸ்லோகத்தில் நாம் வணங்கும் தெய்வம்,
   1. விநாயகர் 2. முருகன் 3. விஷ்ணு 4. சிவன்

2. "பூக்களில் வண்டுகள் தேன் குடித்தன" எனும் வாக்கியத்தின் அபிநயத்திற்கு பொருத்தமான முத்திரைகள்,
   1. முகுளம், சிகரம் 2. அலபத்மம், பிரம்மரம்
   3. முகுளம், அலபத்மம் 4. பதாகம், கம்சாசியம்

3. நாட்டியப் பெண்ணிற்கு உயிர் நாடியாக இருக்க வேண்டிய பத்துக் குணங்களைக் குறிப்பது,
   1. பாத்திர பிராணங்கள் 2. பாத்திர லட்சணம்
   3. பகிர்ப் பிராணங்கள் 4. நாட்டியக் கிரமம்

4. யாசோதைக்குப் கண்ணனுக்குமிடையிலான அன்பு,
   1. மதுர பாவம் 2. வாத்ஸல் பாவம் 3. காந்த பாவம் 4. சாக்கிய பாவம்

5. ஏந்தல் நடனத்திற்கு ஓர் உதாரணம்
   1. சுளகு நடனம் 2. மீனவர் நடனம் 3. கொழுந்து நடனம் 4. கும்மி

6. கையிற் கூடு போட்டு வாசிக்கும் வாத்தியம்,
   1. பறை 2. தவில் 3. நாதஸ்வரம் 4. வீணை

7. தஞ்சைப் பெருங்கோயிலில் அமைக்கப்பட்ட கரண சிற்பங்கள் எத்தனை?
   1. 108 2. 100 3. 81 4. 91

8. இறைவன், குரு, சபையோருக்கு வணக்கம் செலுத்துவதாக அமைந்த நடன உருப்படி,
   1. தில்லானா 2. வர்ணம் 3. பதம் 4. அலாரிப்பு

9. அண்ணாவியாரின் வழிகாட்டலில் ஆற்றுகை செய்யப்படுவது,
   1. கதகளி 2. ஒடிசி 3. நாட்டுக்கூத்து 4. மணிப்புரி

10. கோர்வைகளின் முடிவில் வரும் அடவு அல்லாதது

1. முடிவடவு 2. தீர்மான அடவு 3. மகுட அடவு 4. பரவல் அடவு

11. ஜதிஸ்வரத்தின் பகுதிகள்,

1. பல்லவி, அனுபல்லவி, சரணம்
2. பல்லவி, சரணம்
3. பல்லவி, அனுபல்லவி
4. பல்லவி, அனுபல்லவி, சரணம், சரணஸ்வரம்

12. U என்ற இசைக் குறியீட்டால் குறிக்கப்படுவது,

1. அனுத்துருதம் 2. துருதம் 3. லகு 4. குரு

13. மன்மதனின் அம்புகள் ஆக்கப்படுவது,

1. இரும்பு 2. மலர்கள் 3. மரம் 4. பழங்கள்

14. தினக்கூத்து நடைபெறும் கால அளவு,

1. 1 - 2 மணித்தியாலங்கள்
2. 3 - 4 மணித்தியாலங்கள்
3. 4 – 5 மணித்தியாலங்கள்
4. 5 – 6 மணித்தியாலங்கள்

15. கோவலன் கதையை மையமாக வைத்து ஆடப்படும் கூத்து வழக்கு,

1. வட பாங்கு 2. முல்லை மோடி 3. வடமோடி 4. வசந்தன் கூத்து

16. கண்டிய நடனத்தில் மண்டிய நிலை போன்று பரத நாட்டியத்தில் காணப்படுவது,

1. நாட்டியயாரம்பம் 2. முழுமண்டி 3. அரைமண்டி 4. சமபாதம்

17. ஆதி தாளத்தின் ஒரு ஆவர்த்தனம் எடுத்துக் கொள்ளும் அட்சர எண்ணிக்கை?

1. 02 02. 04 03. 06 04. 08

18. தொழிசார் நடனத்தை ஆற்றுகை செய்தலில் கவனிக்க வேண்டிய முக்கிய விடயம் யாது?

1. கருத்து வெளிப்பாடு
2. பாத அசைவு
3. கை முத்திரை
4. ஒப்பனை

19. வயலும் வயல் சார்ந்த இடமும் எது?

1. குறிஞ்சி 2. முல்லை 3. மருதம் 4. நெய்தல்

20. பாய்ச்சல் அடவு எனப்படுவது எது?

1. ததிங்கிணதொம்
2. கிடதகதரிகிடதொம்
3. தெய் தெய் தத்தா
4. தித்தெய்ந்ததாதெய்

21. சிவபெருமான் ஆனந்த தாண்டவத்தை ஆடிய திருத்தலம் எது?

1. திருவண்ணாமலை 2. சிதம்பரம் 3. தஞ்சாவூர் 4. திருவாரூர்

22. கோலம் போடுதலை அபிநயிக்கப் பயன்படும் முத்திரை யாது?

1. மிருகசீர்ஷம் 2. சதுரம் 3. ஹம்ஸாஸ்யம் 4. திரிபதாகம்

23. பரதநாட்டியக் கச்சேரிகளில் பயன்படுத்தப்படும் தோல்வாத்தியம் எது?

1. உடுக்கு 2. மிருதங்கம் 3. மத்தளம் 4. செண்டை

24. சிலப்பதிகாரத்தில் குறிப்பிடப்படும் நாட்டியக் கலைஞர் யார்?

1. உஷை 2. யசோதை 3. மணிமேகலை 4. மாதவி

25. திரியாங்கங்களில் லகுவை மட்டும் கொண்ட தாளம் எது?

1. ரூபகம் 2. திரிபுடை 3. ஏகம் 4. மட்டியம்

The National e-learning Portal - The General Education

26. ஆதிஷேடன் மூலமாக அதர்மத்தை அழித்த அவதாரம்

1. பரசுராமன் 2. பலராமன் 3. கிருஷ்ணன் 4. இராமன்

27. சப்தத்தின் அங்கங்கள் எவ்வாறு அழைக்கப்படும்

1. பல்லவி, சரணம் 2. கண்டிகைகள் 3. பந்திகள் 4. அனுபல்லவி, சரணம்

28. ரௌத்தர(கோப) ரஸத்திற்குரிய நிறம்

1. சிவப்பு 2. வெள்ளை 3. பச்சை 4. மஞ்சள்

29. துடி என்றழைக்கப்படும் வாத்தியம் எது?

1. மிருதங்கம் 2. தவில் 3. உடுக்கு 4. புறை

30. தாத்தா என்று அழைக்கப்பட்ட நாட்டியக் கலைஞர் யார்?

1. பந்தணை நல்லூர் மீனாட்சி சுந்தரம்பிள்ளை 2. வழுவூர் இராமையா பிள்ளை
3. தஞ்சை பொன்னையா 4. தஞ்சை சின்னையா

31. ஜதிஸ்வரக் கோர்வைகளுக்கிடையே அழகிற்காக அமைக்கப்பட்டுள்ள அடவு?

1. தட்டடவு 2. மெட்டடவு 3. மெய்யடவு 4. மகுடஅடவு

32. கதகளி நடனம் தோன்றிய மாநிலம்

1. கேரளம் 2. ஒரிஸா 3. மணிப்புரி 4. குஜராத்

33. தித்:: தித்:: தெய்::: இதிலுள்ள மாத்திரைகள் எத்தனை?

1. 4 2. 8 3. 12 4. 16

34. தலாங்குதொம் செய்யும் போது பயன்படும் பாத நிலை

1. மண்டலம் 2. உத்ப்ளவனம் 3. ப்ரமரி 4. பாதசாரிகா

35. கூத்து பழக விரும்புவோருக்கு அவரவர் தரத்திற்கேற்ப பாத்திரங்களை தெரிவு செய்து கொடுத்தல் எவ்வாறு அழைக்கப்படும்?

1. சட்டம் கொடுத்தல் 2. சுலங்கை அணிதல்
3. அடுக்குபார்த்தல் 4. அரங்கேற்றம்

36. ஒரு பிரதேசத்தின் நாட்டு வளத்தை வெளிக்காட்டி நிற்கும் நடனம் எது?

1. கும்மி 2. காவடி 3. கோலாட்டம் 4. தொழில்சார் நடனம்

37. திஸ்ரஅலாரிப்பில் இடம் பெறும் மூன்று காலத்திலும் அமைந்த சொற்கட்டு எது?

1. தாதெய்தெய்யும் 2. தாம்திதா தெய்ததெய்
3. தாங்கிடு தத்ததின்ன 4. திருகுடுதக

38. இரு கைகளிலும் ஒரே முத்திரை பிடிக்கம் உறவு முறை?

1. மைத்துனன் 2. மைத்துனி 3. அண்ணன் தம்பி 4. தாய் தந்தை

39. கிடதகதரிகிடதொம் என்பதன் நாட்டியச் சொற்கட்டு?

1. தெய்திதிதெய் 2. தெய்தெய்திதிதெய் 3. திதிதெய் 4. திதிதெய்திதிதெய

40. தாளக் கட்டுப்பாட்டுக்குள் அடங்கிக் கருத்தைப் புலப்படுத்தாத ஆடல் வகை?

1. திருத்தம் 2. நிருத்தியம் 3. நாட்டியம் 4. நடனம்

(40X1=40புள்ளிகள்)

# பகுதி -11

**முக்கியம் :**

**முதலாம்** வினாவையும் வேறு **நான்கு** வினாக்களையும் தெரிவு செய்து மொத்தம் **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.

**1.** பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமான விடை எழுதுக.

1. வான் கைலாயம் எனப் போற்றப்படும் சிவாலயம் எது ?
2. பாத்திரப் பிராணன்களில் அஷ்ரமஹ என்பது எதனைக் குறிக்கிறது?
3. கலியுகத்தின் முடிவில் திருமால் எடுக்கவுள்ள அவதாரம் எது?
4. இராஜ வாத்தியம் என அழைக்கப்படும் வாத்தியம் எது?
5. ஜதிஸ்வரத்தின் ஆரம்பப் பகுதி எவ்வாறு அழைக்கப்படுகிறது?
6. இரு வகைக் கூத்துக்களில் பொது மக்கள் முன்னிலையில் ஆடப்பட்ட ஆடல் எவ்வாறு அழைக்கப்பட்டது?
7. உறவு முறைகளை அபிநயிக்கும் கைகள் எவ்வாறு அழைக்கப்படுகிறது?
8. சங்க மருவிய காலத்தில் நடனத்தில் சிறந்த கலைஞருக்கு வழங்கப்பட்ட பட்டம் என்ன?
9. நீர் கற்றுக் கொண்ட சப்தத்தின் இராகம், தாளம் என்பவற்றை எழுதுக?
10. இலங்கையில் காணப்படும் இரு சாஸ்திரிய நடனங்களை எழுதுக?

(01+01+01+01+01+01+01+01+02+02 = 12 புள்ளிகள்)

**2.** பின்வரும் முத்திரைகளின் விநியோகங்களை ஸ்லோகம், கருத்து ஆகியவற்றுடன் எழுதுக?

1. மயூரம்
2. சுகதுண்டம்
3. புஷ்பபுடம்
4. கீலகம்

( 4 X 3= 12 புள்ளிகள்)

**3.** 1. அவதாரம் என்றால் என்ன? ( 01 புள்ளி)

2. அவதாரத்தின் நோக்கம் யாது? ( 01 புள்ளி)

3. அவதாரங்களை எழுதி அவற்றை அபிநயிக்கப்பயன்படும் முத்திரைகளையும் எழுதுக?

( 10 புள்ளிகள்)

**4.** பின்வருவனவற்றிற்குச் சிறுகுறிப்பு எழுதுக?

1. வர்ணம்
2. மிருதங்கம்
3. பஞ்சபாணங்கள் ( 3 X 4 = 12 புள்ளிகள்)

**5.** 1. ரஸம் என்றால் என்ன? ( 01 புள்ளி)

2. ரஸங்கள் எத்தனை வகைப்படும்? ( 01 புள்ளி)

3. ரஸங்களை எழுதி அவற்றிற்குரிய நிறங்களையும், தேவதைகளையும் குறிப்பிடுக? ( 10 புள்ளிகள்)

**6.** வழுவூர் இராமையாபிள்ளை அவர்களின் வாழ்க்கை வரலாற்றையும், கலைத்தொண்டையும் எழுதுக? ( 12 புள்ளிகள்)

**7.** பாடசாலையில் நடனத்தை ஒரு பாடமாகக் கற்பதன் நன்மைகள் பற்றி எழுதுக?

(12 புள்ளிகள்)

The National e-learning Portal for The General Education

# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்

## மூன்றாம் தவணைப் பரீட்சை – 2017

**பரத நாட்டியம் (செய்முறை)**

**தரம் : 11**

**வினாத்தாள் 01**

**1.** கேட்டல்
1. கர்க்கடக ஹஸ்த விநியோகம்
2. சிரோ வேதம்
3. தேவ ஹஸ்தம்
4. பரீட்சகர் கேட்கும் அடவில் வரும் பாதநிலைகள்

**2.** கேட்டல்
1. கிடதககதரிகிட தொம் அடவின் தாளம் கொலுப்பித்தல்
2. அலாரிப்பு – தாளம் கொலுப்பித்தல்
3. ஜதிஸ்வரம் - தீர்மானம் தாளம் கொலுப்பித்தல்
4. ஜதிஸ்வரம் - 2 ஆவது கோர்வை தாளம் கொலுப்பித்தல்
5. சப்தம் விரும்பிய கண்டிகையினைப் பாடி தாளம் கொலுப்பித்து கருத்து கூறுதல்.

**3.** ஆக்கம்
1. கோலாட்ட நடனம் ஆடிக்காட்டுதல்
2. மாலை நேரக் காட்சியை அபிநயித்தல்
3. புள்ளிப் புள்ளி மானே துள்ளித் துள்ளி ஓடி வா
   அள்ளி இந்தப் புள்ளியை யார் உனக்குத்தந்தது இப்பாடல் வரிகளை அபிநயித்தல்
4. பரீட்சகர் கேட்கும் நவரசம் ஒன்றிற்கு அபிநயம் செய்தல்
5. கோர்வை அமைத்து ஆடுதல் - ரூபக தாளம் 4 ஆவர்த்தனம்

**4.** செய்முறை
1. விரும்பிய அடவு
2. தாதெய் தெய்த 1ஆவது
3. தத்தெய்தாம் 3 ஆவது
4. தித்தெய்ந்த தாதெய் 1ஆவது
5. கிடதககதரிகிடதொம்

**5.** செய்முறை
1. அலாரிப்பு
2. ஜதிஸ்வரம் தீர்மானம்
3. ஜதிஸ்வரம் 2 ஆவது கோர்வை
4. சப்தம்

The National e-learning Portal for The General Education

# மாகாணக் கல்வித் திணைக்களம்

# வடக்கு மாகாணம்

## மூன்றாம் தவணைப் பரீட்சை – 2017

**பரத நாட்டியம் (செய்முறை)**

**தரம் : 11**

**வினாத்தாள் 02**

**1.** கேட்டல்
1. கரத்தரீ ஸ்வஸ்திக ஹஸ்த விநியோகம்
2. திருஷ்டி பேதம்
3. நவக்ரக ஹஸ்தம்
4. பரீட்சகர் கேட்கும் அடவில் வரும் முத்திரைகள்

**2.** கேட்டல்
1. ததிங்கிணதொம் அடவின் தாளம் கொலுப்பித்தல்
2. அலாரிப்பு – தாளம் கொலுப்பித்தல்
3. ஜதிஸ்வரம் - தீர்மானம் தாளம் கொலுப்பித்தல்
4. ஜதிஸ்வரம் - 2 வது கோர்வை தாளம் கொலுப்பித்தல்
5. சப்தம் விரும்பிய கண்டிகை பாடித்தாளம் கொலுப்பித்து கருத்து கூறுதல்

**3.** ஆக்கம்
1. வேப்பிலை நடனம் - ஆடிக்காட்டல்
2. கடற்கரை காட்சியை அபிநயித்தல்
3. சின்னஞ் சிறு கிளியே கண்ணம்மா செல்வக்களஞ்சியமே -இப்பாடல் வரிகளை அபிநயித்தல்
4. பரீட்சகர் கேட்கும் நவரஸம் ஒன்றிற்கு அபிநயம்
5. கோர்வை அமைத்து ஆடுதல் - ஆதி தாளம் 2 ஆவர்த்தனம்

**4.** செய்முறை
1. விரும்பிய அடவு
2. நாட்டடவு – 5 ஆவது
3. தெய்ஹத் தெய்ஹி - 1 ஆவது
4. தத்தெய்தாஹா - 2 ஆவது
5. ததிங்கிணதொம்

**5.** செய்முறை
1. அலாரிப்பு
2. ஜதிஸ்வரம் - தீர்மானம்
3. ஜதிஸ்வரம் - 4 ஆவது கோர்வை
4. சப்தம்

# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்

## மூன்றாம் தவணைப் பரீட்சை – 2017

**பரத நாட்டியம் (செய்முறை)**

**தரம் : 11**

**வினாத்தாள் 03**

**1.** கேட்டல்
1. கடகாவர்த்தன ஹஸ்த விநியோகம்
2. சிரோ பேதம்
3. பாந்தவ்ய ஹஸ்தம்
4. பரீட்சகர் நட்டுவாங்கம் செய்யும் நடையின் சொற்கட்டு

**2.** கேட்டல்
1. தாஹுத ஜெம்தரி தா அடவின் தாளம் கொலுப்பித்தல்
2. அலாரிப்பு – தாளம் கொலுப்பித்தல்
3. ஜதிஸ்வரம் - தீர்மானம் தாளம் கொலுப்பித்தல்
4. ஜதிஸ்வரம் - 1 ஆவது கோர்வை தாளம் கொலுப்பித்தல்
5. சப்தம் விரும்பிய கண்டிகை பாடித் தாளம் கொலுப்பித்து கருத்து கூறல்

**3.** ஆக்கம்
1. கும்மி நடனம் ஆடிக்காட்டுதல்
2. மலைப் பிரதேசத்திற்குரிய காட்சியை அபிநயித்தல்
3. விநாயகனே வினை தீர்ப்பவனே வேழ முகத்தோனே ஞால முதல்வனே - இப்பாடல் வரிகளை அபிநயித்தல்
4. பரீட்சகர் கேட்கும் நவரசம் ஒன்றிற்கு அபிநயம் செய்தல்
5. கோர்வை அமைத்தல் - ஆதி தாளம் 2 ஆவர்த்தனம்

**4.** செய்முறை
1. விரும்பிய அடவு
2. நாட்டடவு 7 ஆவது
3. தத்தெய் தாம் - 1 ஆவது
4. தாஹுதஜெம்தரிதா
5. கிடதககதரிகிடதொம்

**5.** செய்முறை

1. அலாரிப்பு
2. ஜதிஸ்வரம் - தீர்மானம்
3. ஜதிஸ்வரம் - 4 ஆவது கோர்வை
4. சப்தம்

# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்

## மூன்றாம் தவணைப் பரீட்சை – 2017

**பரத நாட்டியம் (செய்முறை)**

**தரம் : 11**

**வினாத்தாள் 04**

**1.** கேட்டல்
1. புஸ்பபுட ஹஸ்த விநியோகம்
2. கண்ட பேதம்
3. தசாவதார ஹஸ்தம்
4. பரீட்சகர் கேட்கும் ஜதிச் சொற்கட்டுக்குரிய நாட்டியச் சொற்கட்டு

**2.** கேட்டல்
1. கிடதகதரிகிடதொம் அடவின் தாளம் கொலுப்பித்தல்
2. அலாரிப்பு - தாளம் கொலுப்பித்தல்
3. ஜதிஸ்வரம் - தீர்மானம் தாளம் கொலுப்பித்தல்
4. ஜதிஸ்வரம் - 3 ஆவது கோர்வை தாளம் கொலுப்பித்தல்
5. சப்தம் விரும்பிய கண்டிகை பாடித் தாளம் கொலுப்பித்து கருத்து கூறல்

**3.** ஆக்கம்
1. ஒயிலாட்டம் ஆடிக்காட்டுதல்
2. காலை நேரக் காட்சியை அபிநயித்தல்
3. சின்னச் சின்னப் பாதம் வைத்து கண்ணா நீ வா - இப்பாடல் வரிகளை அபிநயித்தல்
4. பரீட்சகர் கேட்கும் நவரஸம் ஒன்றிற்கு அபிநயம்
5. கோர்வை அமைத்து ஆடுதல் - ரூபகதாளம் 4 ஆவர்த்தனம்

**4.** செய்முறை
1. விரும்பிய அடவு
2. தெய்ஹத் தெய்ஹி – 4 ஆவது
3. தத்தெய் தாஹா – 3 ஆவது
4. தெய்தெய் தத்தா – 1 ஆவது
5. கிடதகதரிகிடதொம்

**5.** செய்முறை
1. அலாரிப்பு
2. ஜதிஸ்வரம் - தீர்மானம்
3. ஜதிஸ்வரம் - 3 ஆவது கோர்வை
4. சப்தம்

# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்

## மூன்றாம் தவணைப் பரீட்சை – 2017

**பரத நாட்டியம் (செய்முறை)**

**தரம் : 11**

**வினாத்தாள் 05**

**1.** கேட்டல்
1. சம்புட ஹஸ்த விநியோகம்
2. திருஷ்டி பேதம்
3. தசாவதார ஹஸ்தம்
4. பரீட்சகர் கேட்கும் ஹஸ்தத்திற்கு பொருத்தமான பாதநிலையை செய்து காட்டுதல்

**2.** கேட்டல்
1. ததிங்கிணதொம் அடவிற்கு தாளம் கொலுப்பித்தல்
2. அலாரிப்பு – தாளம் கொலுப்பித்தல்
3. ஜதிஸ்வரம் - தீர்மானம் தாளம் கொலுப்பித்தல்
4. ஜதிஸ்வரம் - 5 ஆவது கோர்வை தாளம் கொலுப்பித்தல்
5. சப்தம் விரும்பிய கண்டிகை பாடித் தாளம் கொலுப்பித்து கருத்து கூறல்

**3.** ஆக்கம்
1. செம்பு நடனம் - ஆடிக்காட்டுதல்
2. மழைக் காட்சியை அபிநயித்தல்
3. சின்ன வயதிலே நீ செய்த குறும்பையெல்லாம் சிந்தனை செய்து பாரடா முருகா - இப்பாடல் வரிகளை அபிநயித்தல்
4. பரீட்சகர் கேட்கும் நவரஸம் ஒன்றினை அபிநயித்தல்
5. ஆதி தாளம் 2 ஆவர்த்தனம் கோர்வை அமைத்து ஆடுதல்

**4.** செய்முறை
1. விரும்பிய அடவு
2. தாதெய்தெய்த – 2 ஆவது
3. தெய்ஹத் தெய்ஹி – 3 ஆவது
4. தித்தெய்ந்த தாதெய் - 2 ஆவது
5. ததிங்கிணதொம்

**5.** செய்முறை
1. அலாரிப்பு
2. ஜதிஸ்வரம் - தீர்மானம்
3. ஜதிஸ்வரம் - 5 ஆவது கோர்வை
4. சப்தம்